2016 செப்டம்பர் 1]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.

திரு. என். முருகுமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரி தந்த கலைச்செல்வி, காவியம் கண்ட பெருந்தலைவி, மாண்புமிகு அம்மா அவர்களின் (மேசையைத் தட்டும் ஒலி) கவனத்திற்கு என்னுடைய கோரிக்கை கொண்டு செல்லப்படும் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்லி அமர்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று காலையிலே இதுகுறித்து அறிவிப்பு கொடுத்திருக்கிறீர்கள். அதுகுறித்து raise பண்ண நான் அனுமதி தரமுடியாது. ** குறித்தெல்லாம் அவையில் பேசமுடியாது. நீங்கள் பேசியது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) அதுகுறித்து பேசுவதையெல்லாம் நான் அவைக்குறிப்பில் ஏற்ற முடியாது. (குறுக்கீடுகள்) ** குறித்துப் பேசுவது எதுவும் அவைக்குறிப்பிற்கு நான் கொண்டுவரமுடியாது. ஆகவே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், அதுகுறித்துப் பேசாமல், வேறு ஏதாவது பேசுவதாக இருந்தால் பேசவும். (குறுக்கீடுகள்) அது சம்பந்தமாகப் பேசுவதற்கு அனுமதியில்லை. (குறுக்கீடுகள்)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

*அதுகுறித்துப் பேச நான் அனுமதிக்கவில்லை. (குறுக்கீடுகள்) ** குறித்தெல்லாம் பேசவேண்டாம். (குறுக்கீடுகள்) ** பற்றியெல்லாம் நீங்கள் இங்கு அவையில் raise பண்ண முடியாது. (குறுக்கீடுகள்) அதற்கு நான் அனுமதி அளிக்கவில்லை. (குறுக்கீடுகள்) நீங்கள் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) தயவுசெய்து எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். திரு. அர. சக்கரபாணி அவர்கள் இன்று காலையில் என்னுடைய அறையில் என்னிடம் இதைக் கொடுத்து கேட்டவுடனே, நான் தெளிவாக அவருக்குச் சொல்லிவிட்டேன். "எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இதுகுறித்து அவையில் பேசுவதற்கு அனுமதி கேட்டால், நான் அனுமதிக்க முடியாது" என்று சொல்லிவிட்டேன். எனவே, நீங்கள் அவையில் இதை record செய்வதற்கு வாய்ப்பில்லை. (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வேறு பொருள் குறித்துப் பேசுவதாக இருந்தால் சொல்லுங்கள்; நான் பேச அனுமதி தருகிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ***

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதெல்லாம் நீங்கள் அவையில் record செய்ய முடியாது. நீங்கள் ** சம்பந்தமாகப் பேசியது உட்பட அனைத்தும் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடுகள்) அதுகுறித்து அவையில் பேச அனுமதிக்கமுடியாது. (குறுக்கீடுகள்) அவையில் அதுகுறித்துப் பேச அனுமதிக்கமுடியாது.*

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் அவையிலிருந்து வெளியேறினர்.)

அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி, உட்காருங்கள், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேச எழுந்துவிட்டார்கள்.

***மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

2016 செப்டம்பர் 1]

முற்பகல் 10-55

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) 2016 ஆம் ஆண்டு . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர், ஒரு நிமிடம் இருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி, என்னவென்று சொல்லுங்கள்.*

திரு. கரி. இராமசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதெல்லாம் அவைக் குறிப்பிற்கு வராது, அது நீக்கப்படுகிறது. நீங்கள் வேறு ஏதாவது பேசுகின்றீர்களா? (குறுக்கீடுகள்) அது சம்பந்தமாக அனுமதி இல்லை. (குறுக்கீடுகள்) அது சம்பந்தமாக பேச அனுமதி இல்லை. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) அதெல்லாம் இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*

(இந்திய தேசிய காங்கிரஸ் மற்றும் இந்திய யூனியன் முஸ்லீம் லீக் உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

3. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டமுன்வடிவு, 2016

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.

***மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*